THE WORLD NEEDS THE WORD
IBT

மே 2025
மலர் 23, இதழ் 8

# சத்திய வார்த்தை

IBT நிறுவனர் (Late) Rev. Prof. S. பன்னீர் செல்வம்

SATHTHIYA VAARTHAI - TAMIL
இந்திய வேதாகம மொழிபெயர்ப்பாளர்களின் செய்தி மலர்

ஆண்டு சந்தா
ரூ. 100/-

# பரிசுத்தவான்களால் முத்திரைப் பதித்த வாகனங்கள்



# பரிசுத்தவான்களால் முத்திரைப் பதித்த வாகனங்கள்

தேவன் நோவாவை நோக்கி, **"நீ கொப்பேர் மரத்தால் ஒரு பேழையை உண்டாக்கு. அதிலே சகலவித மாம்சமான ஜீவன்களிலும், ஆணும், பெண்ணுமாக வகை ஒன்றுக்கு ஒவ்வொரு ஜோடு ...பேழைக்குள் சேர்த்துக் கொள். அதேபோல் ஜாதி ஜாதியான பறவைகளிலும்... மிருகங்களிலும், ஊரும் பிராணிகள் எல்லாம் பேழைக்குள் வரக்கடவது" (ஆதி 6 : 13-20).**

தேவனானவர் இந்த பூமியை அழிப்பதற்கு முன்பு நோவாவிடம் எல்லா மிருகங்கள், ஊரும் பிராணிகள், பறவைகள் எல்லாவற்றிலும் ஜோடு ஜோடாக பேழைக்குள் வைக்குமாறு கூறினார். அதிலே எல்லா மிருகங்களுமே வந்து சேர்ந்திருக்கும். வெள்ளம் நின்றபின் தேவனின் கட்டளைப்படி பேழையிலிருந்து எல்லாம் வெளியேறியது. ஆனால், அதில் ஒரு சில மிருகங்கள் மனிதர்களுக்கு வாகனங்களாக பயன்படுத்தப்பட்டன. அரசர்களுக்கும், தீர்க்கதரிசிகளுக்கும், போர்க்களத்தில் போரிடுவதற்கும், தூர தேச பிராயணத்திற்கும், இரதத்தில் பூட்டி சீக்கிரமாய் செல்வதற்கும் கோவேறு கழுதை, குதிரைகள், ஒட்டகங்கள் போன்றவை பயன்படுத்தப்பட்டன. தற்காலத்தில் இருப்பதைப் போல் எந்த ஒரு வசதியும் இல்லாதபடியால் எங்கே போக வேண்டுமானாலும் மிருகங்களைச் சார்ந்துதான் வாழ்ந்தார்கள்.

ஏசாயா 66 : 20-வது வசனத்தில் பார்த்தால் குதிரை, இரதங்கள் குலாரி வண்டி (சிவிகை - சொகுசான பெரியவண்டி) கோவேறு கழுதை, ஒட்டகங்கள் போன்ற மிருகங்கள் மற்றும் சொகுசான பெரிய வாகனங்கள் குறித்து எழுதப்பட்டுள்ளன.

## *வேதாகமத்தில் முத்திரைப் பதித்த வாகனங்கள்*

1. கழுதைகள்
2. ஒட்டகங்கள்
3. குதிரைகளும், இரதங்களும்

## *I. முத்திரைப் பதித்த வாகனம்: கோவேறு கழுதைகள்*

பழைய ஏற்பாடு மற்றும் புதிய ஏற்பாட்டில் வரும் கழுதைகள் மனிதர்களைச் சுமந்து தூரமான இடத்திற்கு அழைத்துச் செல்லும் திறன் அல்லது வலிமை கொண்டவை. தற்காலத்தில் நாம் பார்க்கும் கழுதைகள் பொதி சுமக்க மட்டுமே பயன்படுத்தப்படுகின்றன. காரணம் பெலவீனமானவைகள், திடன் இல்லாதவைகள், வலிமையில்லாதவைகள். நல்ல ஆகாரம் அவைகளுக்கு கொடுக்கமாட்டார்கள். ஆனால், கோவேறு கழுதைகள் அப்படி அல்ல. அறுபது கிலோ, எழுபது கிலோ எடையுள்ள மனிதனையும், பொருட்களையும் சுமக்கக்கூடிய வலிமை, பெலன் கொண்டவைகளாயிருக்கும். அதன் எஜமான் அந்தக் கோவேறு கழுதைகளுக்கு நல்ல போஷாக்கான ஆகாரத்தைக் கொடுத்து நன்கு கவனித்து வளர்ப்பான்.

## *கழுதையின் முக்கியத்துவம் என்ன?*

பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாட்டில் முதன் முதலில் வரும் வாகனம் கழுதை தான்.

**ஆபிரகாம் அதிகாலையில் எழுந்து தன் கழுதையின் மேல் சேணங்கட்டி... தேவன் தனக்குக் குறித்த இடத்திற்குப் புறப்பட்டுப் போனான் (ஆதி. 22 : 3), மூன்றாம் நாளில் ... தூரத்திலே அந்த இடத்தைக் கண்டான் (ஆதி. 22 : 4).**

**அதிகாலையில்** எழுந்து தேவனைப் பணிந்து / தொழுது கொள்வதில் ஆர்வமுள்ளவராக ஆபிரகாம் விளங்கினார். தன்னுடைய நூறாவது வயதிலே (சாராளுக்கு தொண்ணூறு வயது) நிச்சயமாய் ஒரு ஆண் குழந்தை பிறக்கும், அவனுக்கு ஈசாக்கு (ஆதி 17 : 19) என்று பெயரிடுவாயாக என்று தேவனால் பெயர் வைக்கப்பட்ட மகனை பலியிடுமாறு தேவன் கூறின போது, ஆபிரகாம் என்ன நினைத்திருப்பார்? எப்படி அழுதிருப்பார்!

பெயெர்செபாவிலிருந்து மோரியா தேசத்திற்கு வந்து பலியிட வேண்டியிருந்ததால் தானும், தன் மகனும், வேலைக்காரரில் இரண்டு பேரையும் அழைத்துக் கொண்டு தன் சொந்த வாகனமான **கழுதையின்** மேல் அமர்ந்து **மூன்று நாள்** பிரயாணம் செய்து, மோரியா தேசம் வந்து சேர்ந்தார். பாதைகள் எப்படிப்பட்டதாக இருந்ததோ நமக்குத் தெரியாது. மூன்றுநாள் பிரயாணம் பண்ணி கர்த்தர் சொன்ன காரியத்தை முடித்து, மீண்டும் மூன்று நாள் அவர்களை சுமந்து செல்வதென்றால் எத்தனை வலிமையும், திடகாத்திரமும் கொண்ட வாகனமாக ஆபிரகாமின் கோவேறு கழுதை இருந்திருக்கும்! எல்லாம் தேவனின் செயல்.

தாவீது கூறியது, **''என் குமாரனாகிய சாலொமோனை என் கோவேறு கழுதையின் மேல் ஏற்றி, அவனைக் கீகோனுக்கு அழைத்துக் கொண்டு போங்கள் (I இரா. I : 33) அப்படியே ஆசாரியனாகிய சாதோக்கும், தீர்க்கதரிசியாகிய நாத்தானும், யோய்தாவின் குமாரனாகிய பெனாயாவும்... சாலொமோனை தாவீதினுடைய கோவேறு கழுதையின் மேல் ஏற்றி... கீகோனுக்கு வந்தார்கள். ஆசாரியனான சாதோக்கு தைலக்கொம்பை... எடுத்து சாலொமோனை அபிஷேகம் பண்ணினான்" (I இரா. I : 38,39).**

அதன்பின்பு **சாலொமோன் நகர் வலம் வந்து** தாவீது ராஜாவினுடைய சிங்காசனத்திலே வீற்றிருந்து ராஜாவானான்.

யூதர்களுடைய கலாச்சாரம் / பண்பாடு என்னவென்றால், இஸ்ரவேல் தேசத்துக்கு இராஜாவாக வருபவர் கோவேறு கழுதையின் மீது ஏறி நகரைச்சுற்றி ஊர்வலமாக வந்து அதன்பின் அரியணை ஏறி, ராஜ சிம்மாசனத்தில் அமர வேண்டும். அப்படித்தான் தாவீது ராஜாவின் மகனான சாலொமோனும் (1 இரா. 1 : 35) பதவி ஏற்றார்.

பிலேயாம் இஸ்ரவேலராக இல்லாத போதிலும் கர்த்தருடன் நெருங்கிப் பழகியவர். கர்த்தர் என்ன செய்யச் சொல்லுகிறாரோ அதை திருப்பிச் சொல்லுவது இவர் பணி. இவர் தகப்பனார் பெயர் பேயோர்.

இஸ்ரவேலர் ஏராளமாயிருந்தபடியால் மோவாப் தேசம் மிகவும் பயந்தது. அந்த சமயம் மோவாபியருக்கு ராஜாவாக பாலாக் இருந்தான். மீதியானியரின் மூப்பர்களிடம் இஸ்ரவேலர் கூட்டம் நம்மைச் சுற்றி யாவரையும் மாடு புல் மேய்வது போல் நம்மை அழித்து விடுவார்கள் என்று கூறினான். ஆகவே, இஸ்ரவேல் மக்கள் எவ்விதத்திலும் மோவாபியரையும், மீதியானியரையும் மேற்கொள்ளாமல் இருக்க பேயோரின் மகனான பிலேயாமை அழைத்து வரும்படி பாலாக் தன்னுடைய ஸ்தானாபதிகளை அனுப்பினான். அவர்கள் பிலேயாம் வீட்டில் தங்கினார்கள். பிலேயாமிடம் தேவன் கூறியது: " நீ அவர்களோடே போக வேண்டாம். இஸ்ரவேல் மக்கள் எகிப்திலிருந்து என்னால் மீட்டுக் கொண்டு வரப்பட்டவர்கள். அவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள்" (எண். 22 : 12) என்றார். பிலேயாம் போக மறுத்துவிட்டான்.

அவர்கள் போனபின்பு இரண்டாவது முறையாக பாலாக் பிரபுக்களை அனுப்பினான். பிலேயாம் வீட்டில் அவர்கள் தங்கினார்கள்.

*பிலேயாம் பாலாக் ஊழியக்காரரிடம் கூறியது:*

**"பாலாக் எனக்குத் தன் வீடு நிறைய வெள்ளியும், பொன்னையும் தந்தாலும்.... என் தேவனாகிய கர்த்தரின் கட்டளையை நான் மீறக்கூடாது"** என்றார் (எண். 22:18).

கர்த்தர் கூறினார்: **"பிலேயாமே நீ எழுந்து அவர்களோடு கூட போ. ஆனாலும் நான் உனக்குச் சொல்லும் வார்த்தையின்படி மாத்திரம் நீ செய்ய வேண்டும் என்றார்" (எண். 22:20).**

பிலேயாம் காலமே எழுந்து தன் கழுதையின் மேல் சேணங்கட்டி, மோவாப்பின் பிரபுக்களோடு கூடப்போனான். கர்த்தருடைய தூதனானவர் வழியிலே அவனுக்கு எதிராக உருவின வாளோடு (பட்டயம்) நின்றார்.

*கர்த்தருடைய தூதனும், கழுதையும்*

தூதன் நிற்பது தீர்க்கதரிசியான பிலேயாமின் கண்களுக்குத் தெரியவில்லை. ஆனால், கழுதை கண்டு விலகிப் போனது. இரண்டாவது முறையும் கழுதை தூதனைக் கண்டு ஒதுங்கியது. மூன்றாவது முறையும் தூதனைக் கண்டு பிலேயாமின் கீழ்ப்படுத்துக் கொண்டு எழுந்திருக்காமல் இருந்தபடியால், மூன்று முறையும் தன்னைச் சுமந்து வந்த வாகனமான கழுதையைத் தடியினால் பிலேயாம் அடித்தான்.

*பிலேயாமும் அவன் வாகனமான கழுதையின் உரையாடலும்:*

கழுதை – பிலேயாமே என்னை மூன்று தரம் அடிக்க நான் என்ன செய்தேன்? இவ்வளவு நாளும் நீர் ஏறின கழுதை நான் அல்லவா? உமக்கு எப்போதாகிலும் இதுபோல் செய்தது உண்டா? என்று கேட்டது.

பிலேயாம் – என் கையில் ஒரு பட்டயம் இருந்திருந்தால் உன்னைக் கொன்று போடுவேன்.

கர்த்தர் சரியான நேரத்தில் பிலேயாமின் கண்களைத் திறந்தார். உருவின வாளை (பட்டயம்) தன் கையில் பிடித்து நின்றுக் கொண்டிருந்த கர்த்தருடையத் தூதனை கண் திறக்கப்பட்டவனான பிலேயாம் கண்டான். முகங்குப்புற விழுந்து பணிந்தான்.

**தூதன் சொன்னது என்ன?** பிலேயாமே நீ உன் வாகனத்தை 3 தரம் அடித்ததென்ன? உன் வழி எனக்கு மாறுபாடாயிருந்ததினால் நான் உனக்கு எதிரியாக புறப்பட்டு வந்தேன். உன் வாகனமான கழுதை மட்டும் என்னைக் கண்டு விலகாமல் இருந்திருந்தால், நான் உன்னைக் கொன்று போட்டு கழுதையை உயிருடன் வைப்பேன் என்றார். பிலேயாம் மனம் மாறினார்.

எலியாவை காப்பாற்ற காகத்தின் மூலம் (மாமிச பட்சினி) அப்பமும், இறைச்சியும் கொடுத்து காப்பாற்றிய நம் தேவன் அடுத்தபடியாக உலக அதிசயமான ஒரு மிருகத்தைப் பேச வைத்து, பிலேயாமின் கண்கள் திறக்கப்படும்படிச் செய்தார். இதுமாதிரியான அற்புதங்களையும், அதிசயங்களையும் செய்தவரும், தூதனாக வந்தவரும் மெய்யாகவே திரித்துவத்தில் ஒருவர் என்பது தெளிவாகும். தேவனால் கூடாதது ஒன்றுமில்லை.

இறுதியாக நாம் பார்க்கப் போவது இயேசு கிறிஸ்துவானவர் எருசலேமில் சென்ற பவனி ஊர்வலம். **"இதோ உன் ராஜா உன்னிடத்தில் வருகிறார். அவர் நீதியுள்ளவரும் இரட்சிக்கிறவரும், தாழ்மையுள்ளவரும், கழுதையின் மேலும் கழுதைக் குட்டியாகிய மறியின் மேலும் ஏறிவருகிறவருமாயிருக்கிறார்" (சகரியா 9:9).**

சகரியா தீர்க்கன் மேற்கோள் காட்டிய வசனமானது, சகரியா கூறி 500 ஆண்டுகளுக்குப் பின் கிறிஸ்துவின் முதலாம் வருகையின் போது நிறைவேறிவிட்டது. ஆம், நம் ஆண்டவராகிய கிறிஸ்து உலகத்தைப் படைத்த சர்வ சிருஷ்டிக்கும் எஜமானர், இரட்சகர், மீட்பர், ராஜாதி ராஜா. ஆகவே, அவர் நமக்கு சமாதானத்தைக் கொடுக்க கழுதையின் மீது பவனி வந்தார்.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து பவனி சென்ற நிகழ்வானது நான்கு சுவிசேஷ புத்தகங்களிலும் இடம் பெற்றுள்ளது (மத். 21 : 1-10, மாற்கு 11 : 1-10, லூக். 19 : 29-38, யோ. 12 : 12-16).

யூதர்களின் கலாச்சாரத்தின்படி ராஜாவாக முடிசூட்டப்படுமுன் இவ்வாறு பவனி செல்வது வழக்கம். நம்முடைய கிறிஸ்து உலகத்திற்கெல்லாம் ராஜா; அவர் பவனி வந்து சென்றால்தான் மக்களால் ராஜாவாக ஏற்றுக் கொள்ளப்படுவார் என்பது அர்த்தமல்ல. யூதர்களுடைய முறைமையைக் கடைபிடித்தார். தீர்க்க தரிசனங்கள் நிறைவேற வேண்டும். ஆண்டவர் பவனி வரும்போது தங்களைத் தாங்களே ஆயத்தப்படுத்திக் கொண்டார்கள். கிறிஸ்து ராஜா, கழுதையின் மீது அமர வஸ்திரங்களை விரித்தார்கள். மரக்கிளைகளைத் தறித்து வழியிலே பரப்பினார்கள். அதோடு நின்றுவிடாமல் ஒரு பாடலாகப் பாடினார்கள்.

**"...தாவீதின் குமாரனுக்கு ஓசன்னா! கர்த்தரின் நாமத்தினாலே வருகிறவர் ஸ்தோத்திரிக்கப்பட்டவர், உன்னதத்திலே ஓசன்னா என்று ஆர்ப்பரித்தார்கள்."** எருசலேம் நகரத்தார் யாவரும் ஆச்சரியப்பட்டார்கள். ஓசன்னா என்பதற்கு இப்பொழுதே இரட்சியும் என்று அர்த்தமாம் (மத். 21: 9).

ஆண்டவரின் முதல் வருகையான பிறப்பிலே தேவதூதர்கள் பாடினார்கள். **"உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமையும், பூமியிலே சமாதானமும், மனுஷர்மேல் பிரியமும் உண்டாவதாக என்று சொல்லி, தேவனைத் துதித்தார்கள்" (லூக். 2 : 14).**

கர்த்தருடைய இரண்டாம் வருகையிலே நியாயாதிபதியாக எக்காளச் சத்தத்தோடும், தேவ தூதர்களோடும், பரிசுத்தவான்களோடும் வருவார். நாமும் அவரை எதிர்கொண்டு, அவருடைய குடும்பத்தின் அங்கத்தினர்களாக சேர ஆயத்தமாயிருப்போமாக!

மெய்யாகவே, நான் சீக்கிரமாய் வருகிறேன். ஆமென். கர்த்தராகிய இயேசுவே வாரும் ஆமென்.

## *II. முத்திரைப் பதித்த வாகனம்: ஒட்டகம்*

பாலைவனக் கப்பல் என்று ஒட்டகத்திற்கு ஒரு சிறப்புப் பெயர் உண்டு. காரணம் பாலைவனத்தில் இருக்கும் உஷ்ணமான மணல்கள் மீது நடந்து செல்வது என்பது அதிக கடினம். இதுபோன்ற இடங்களைக் கடந்து செல்லவும், பொருட்கள் மற்றும் மனிதர்களையும் ஏற்றிக் கொண்டுச் செல்வதற்கு இது போன்ற வாகனம் தான் மனிதனுக்கு வசதியாகக் காணப்பட்டது. சுடு மணலில் நடக்கத்தக்க வாகனம் ஒட்டகம் மட்டும்தான்.

### *ஆபிரகாமின் ஊழியக்காரன் மெசொப்பொத்தாமியா வருதல்*

நீ என் தேசத்துக்கும், என் இனத்தாரிடத்துக்கும் போய் என் குமாரனுக்கு (ஈசாக்கு) ஒரு பெண்ணை கொண்டு வரும்படிக்கு தம்முடைய தூதனை உனக்கு முன்பாக அனுப்புவார் (ஆதி 24 : 7).

தனக்கு உண்டான எல்லாவற்றிற்கும் அதிகாரியான தன் ஊழியக்காரனிடம் தன்னுடைய சொந்த தேசத்திற்குச் சென்று ஈசாக்குக்கு ஒரு பெண்ணை அழைத்துக் கொண்டு வருமாறு

ஆபிரகாம் அனுப்புகிறார். அந்த ஊழியக்காரன் என்ன செய்தான்? தன் எஜமானுடைய **ஒட்டகங்களில்** பத்து ஒட்டகங்களைத் (10 Camels) தன்னுடனே கொண்டு போனான். சகலவித உச்சிதமான பொருட்களும் அந்த ஊழியக்காரன் கையில் இருந்தன. கானான் தேசத்திலிருந்து நாகோருடைய ஊர்போய் சேர்ந்தான்.

### *நாகோர் யார்?*

ஆபிரகாமுக்கு உடன் பிறந்த சகோதரர் இருவர் நாகோர், ஆரான் என்பவர்கள். ஆரானின் மகன் லோத்து. ஆரானின் மகள்கள் மில்க்காள் மற்றும் இஸ்காள். நாகோர் தன் தம்பியின் மகளான மில்க்காளின் கணவன். இவர்களின் மகள் ரெபெக்காள்.

### *ஊழியக்காரனின் ஜெபம்*

பத்து ஒட்டகங்களுடன் சென்றான் என்றால் கண்டிப்பாக பத்து பேராவது உடன் சென்றிருக்க வேண்டும். மேலும் ஆபிரகாம் ஒரு சீமான் (ஆதி. 24 : 35). ஆபிரகாமிடம் பொன்... ஒட்டகங்களும், கழுதைகளும் இருந்தன. ஊழியக்காரனே 10 ஒட்டகங்களை அழைத்து வந்தானென்றால் இன்னும் எத்தனை ஒட்டகங்கள் ஆபிரகாமின் வீட்டில் இருந்திருக்கும் என்று நினைத்துப் பாருங்கள்.

ஒட்டகங்களையெல்லாம் ஒரு பக்கமாக நிறுத்தி விட்டு ஜெபித்தான்: நான் குடிக்க தண்ணீரும் என் ஒட்டகங்களுக்கும் வார்ப்பேன் என்று சொல்லும் பெண் எவளோ, அவளே ...ஈசாக்குக்கு நியமித்தவளாயும், என் எஜமானுக்கு அநுக்கிரகம் செய்தீர் என்று நான் அதினாலே அறியவும் செய்தருளும் என்று வேண்டினான் (ஆதி 24 : 12-14). அப்போது மகா ரூபவதியான ரெபெக்காள் துரவில் இறங்கி தண்ணீர் குடத்தோடு ஏறிவந்தாள். ஆபிரகாமின் ஊழியக்காரனுக்கு தண்ணீர் கொடுத்து, அவன் அழைத்து வந்த 10 ஒட்டகங்களுக்கும் துரவிலே மொண்டு வந்தாள். எவ்வளவு கஷ்டப்பட்டிருப்பாள்! சிந்தியுங்கள்!

ஒரு மனிதன் குடிப்பதற்கு தண்ணீர் கொடுப்பது மிக எளிது. ஆனால் 10 ஒட்டகங்கள் குடிக்குமளவிற்குத் தண்ணீர் வார்த்தது, ரெபெக்காளின் சிறந்த குணத்தைக் காட்டுகிறது. மற்றவர்களுக்கு உதவி செய்யும் போது, கடினமாக இருந்தாலும் மகிழ்ச்சியோடு செய்வதில் தான், நம்முடைய குணநலன் அமைந்திருக்கிறது.

தன்னால் தாகம் தீர்க்கப்படும் ஒட்டகங்கள் பல வெகுமதிகளை தனக்காக சுமந்து கொண்டு இருக்கின்றன என்றும், தன்னை மணப்பெண்ணாக ஏற்றிச் செல்லப் போகின்றன என்றும் ரெபெக்காள் அறியாதிருந்தாள்.

நாம் கர்த்தருக்கு ஊழியம் செய்கிறோம். ஆனால், ஒரு ஊழியக்காரன் எப்படி இருக்க வேண்டும் என்று ஆதியாகமம் 24-ஆம் அதிகாரத்தை தியானித்து, சேவை செய்ய வேண்டும். ஜெபம் செய்யும் மனிதனை (ஈசாக்கு) தேவன் ரெபெக்காளுக்கு கொடுத்தார்.

### *ஞானிகளும், விண்மீன்களும்*

**... சாஷ்டாங்கமாய் விழுந்து குழந்தையைப் பணிந்து கொண்டு, தங்கள் பொக்கிஷங்களைத் திறந்து, பொன்னையும், தூபவர்க்கத்தையும், வெள்ளைப் போளத்தையும் இயேசு பாலகனுக்குக் காணிக்கையாக வைத்தார்கள் (மத். 2 : 11).**

ஞானிகள், வானியலில் மிகுந்த ஞானமுள்ள வர்களாக இருந்ததுமாத்திரம் அல்ல, பெரிய செல்வந்தர்களாகவும் காணப்பட்டார்கள். மேலும், வானியல் சாஸ்திரிகள் யூதர்கள் கிடையாது.

அதேசமயம், ஒரு வானத்திலே ஒரு விண்மீனைக் கண்டு, எந்த ஒரு மனிதனும் பல சிரமங்களைச் சந்தித்து தன் உயிரை துச்சமாக நினைத்து, நெடுந்தூரப் பயணம் செய்ய மாட்டான். ஞானிகள் எத்தனைபேர் புறப்பட்டார்கள் என்பது வேதாகமத்தில் எந்த ஒரு சான்றும் கிடையாது. நிச்சயமாக பரிசுத்த ஆவியானவரின் ஏவுதலினால்தான் ஞானிகள் தங்கள் பயணத்தை மேற்கொண்டிருக்க முடியும். சாஸ்திரிகள் விண்மீன்களின் வழிநடத்துதலின் பேரில் அவர்கள் பயணத்தை மேற்கொள்ள வேண்டியிருந்ததால் எவ்வளவு நாட்கள் ஆகும் என்று தெளிவுபெற முடியவில்லை. மேலும், நெடுந்தூரம் பயணமாகத்தான் இருக்கும் என்று நினைத்தபடியால் ஒட்டகங்களை தயார் செய்து, அவைகளுக்கு ஆகாரம் தயார் செய்ய வேண்டும். தங்களுக்கு வேண்டிய தண்ணீர் முதல் உணவுகளை ஆயத்தம் செய்து, அதன்பின் புறப்பட வேண்டும். வானியல் அறிஞர்கள் எருசலேமுக்கு கிழக்கிலிருந்து ஒட்டகங்களில் புறப்பட்டார்களென்றால், பாரசீகம், சீனா போன்ற நாடுகளில் இருந்து தான் புறப்பட்டிருக்க வேண்டும். ஒட்டகம், கழுதை, கால்நடை, குதிரை, படகு என்று அநேக வாகனங்களின் உதவி கொண்டு நதி, பல நாடுகள், மலை, பள்ளத்தாக்குகள் என்று கடந்து வந்தனர். ஞானிகள் வந்ததன் நோக்கம் யூதருக்கு ராஜாவாக பிறந்தவரைக் கண்டு தொழுது கொள்ள வேண்டும் என்பதே. கண்டார்கள், தொழுதார்கள், காணிக்கைகளைப் படைத்தார்கள்.

## *III. முத்திரைப் பதித்த வாகனம்: குதிரைகளும், இரதங்களும்*

பார்வோனின் குதிரைகள் அவனுடைய இரதங்களோடும், குதிரை வீரரோடும் சமுத்திரத்தில் பிரவேசித்தன. கர்த்தர் சமுத்திரத்தில் ஜலத்தை பார்வோனின் மக்கள் மீது திரும்பப் பண்ணினார். இரதங்களையும், குதிரை வீரர்களையும், பார்வோனின் இராணுவம் அனைத்தையும் சமுத்திரம் மூடிக்கொண்டது. அவர்களில் ஒருவனாகிலும் தப்பவில்லை. (யாத். அதி: 14, 15)

மிருக வாகனங்களிலே குதிரை மிகவும் பலம் வாய்ந்தது. விரைவில் செல்லக் கூடியது. வேகமாக ஓடக்கூடியது.

**கட்டளைகள் அகாஸ்வேரு ராஜாவின் பேரால் எழுதப்பட்டு ...குதிரைகள் மேலும் வேகமான ஒட்டகங்கள் மேலும் கோவேறு கழுதைகள் மேலும் ஏறிப்போகிற அஞ்சல்காரர் கையில் அனுப்பப்பட்டது (எஸ்தர் 8:10).**

இரதங்கள் தனியாக ஓட முடியாது. குதிரைகள் பூட்டப்பட்டால்தான், இரதங்களில் மன்னர்களோ, தலைவர்களோ ஏறிச் செல்ல முடியும். இப்படியாக இஸ்ரவேலின் சத்துருவான பார்வோன் தன்னுடைய தேசத்தை விட்டு (எகிப்து) அவர்களை அனுப்பிவிட்டு அவனுக்கு அரண்மனையிலே நிம்மதியாக இருக்க முடியவில்லை. இஸ்ரவேலரை மீண்டும் அடிமைத்தன வீடாகிய எகிப்திற்கு அழைத்துவர **...எகிப்தியர் அவர்களைத் தொடர்ந்து, பார்வோனுடைய சகல குதிரைகளோடும் இரதங்களோடும் குதிரை வீரரோடும் அவர்கள் பிறகாலே சமுத்திரத்தின் நடுவே பிரவேசித்தார்கள் (யாத்.14:23).**

யுத்தத்தை நடத்துகிறவரும், எதிரிகளின் கையினின்று காப்பவரும், இன்னல்கள், துன்பங்களின் மத்தியிலே நமக்கு சமாதானத்தையும், வெற்றியையும், பாதுகாப்பையும் தருகிறவர் நம் ஆண்டவர் ஒருவர் மட்டுமே. பெற்ற தாய் மறந்தாலும், நம்மை மறக்காத ஒரே தகப்பன் நம்முடைய சர்வ வல்லமையுள்ள கர்த்தர் மட்டுமே. இஸ்ரவேலர் வெட்டாந்தரையில் நடந்து செல்வதற்கு அவர்கள் வலது, இடது புறத்திலும் சமுத்திரம் அவர்களுக்கு மதிலாக நின்றது.

குதிரையானாலும், இரதமானாலும், குதிரை வீரர்களானாலும், எகிப்தின் ராஜாவானாலும் எவ்வளவு வலிமையுள்ளவர்களாய் இருந்தாலும், தேவனுடைய வல்லமைக்கு முன்னால் எல்லாம் வீண், வீண், வீண். செல்லாக்காசாகிப் போனது. எகிப்திய வீரர்கள் சமுத்திரத்தில் மாண்டனர்.

சீரிய தேசத்தின் படைத்தலைவனாகிய நாகமான் ஒரு குஷ்டரோகி. ஆனால், மகா பராக்கிரமசாலி. அவனுடைய வீட்டிலிருந்த ஒரு சிறு பெண்ணின் சொல்லுக்கு செவிமடுத்து, சீரியா தேசத்து ராஜாவிடம் ஒரு நிருபத்தை வாங்கி, அதைக் கொண்டு போய் இஸ்ரவேல் ராஜாவிடம் கொடுத்தான். இஸ்ரவேல் ராஜா உக்கிர கோபம் கொண்டான். இதைக் கேள்விப்பட்ட எலிசா தீர்க்கன் தன்னிடம் அனுப்பி வைக்குமாறு கூறினான்.

அப்படியே நாகமான் தன் **குதிரைகளோடும், இரதத்தோடும்** வந்து எலிசாவின் வாசற்படியிலே நின்றான்.

*__நாகமானின் எண்ணமும், காணிக்கையும்__*

பத்து தாலந்து வெள்ளி, ஆறாயிரம் சேக்கல் நிறை பொன்னையும், பத்துமாற்று வஸ்திரங்கயையும் எடுத்துக் கொண்டு போனான். நாகமான், தான் ஒரு படைத்தளபதி (Chief Commandar) - சீரியா நாட்டிலே ஒரு பெரிய மனுஷன், தன் சொல்லுக்கு எல்லா வகையான படைவீரர்களும் கீழ்ப்படிந்து நடப்பார்கள் என்ற மேட்டிமையுடன் குதிரைகள் பூட்டப்பட்ட இரதத்தில் வந்து எலிசா தீர்க்கனின் வாசலிலே நின்றான். நாகமானுடைய நோக்கமெல்லாம் தீர்க்கதரிசி வெளியே வந்து தன் உடம்பில் உள்ள குஷ்டரோகத்தை தன் கையினால் தடவி தன்னுடைய தோல்வியாதியை நீக்கி விடுவான் என்று நினைத்திருந்தான். தாழ்மை இல்லாமல் தன் இரதத்தில் வந்து நிற்பதைக் கண்ட எலிசா வெளியே வரவே இல்லை. அவனைப் பார்க்கவும் இல்லை. தன்னுடைய வேலைக்காரனிடம், ''போய் யோர்தானில் ஏழுதரம் ஸ்நானம் பண்ணு, அப்போது உன் மாம்சம் மாறி சுத்தமாவாய்" என்றும் சொல்லச் சொன்னான்.

நாகமான் கடுங்கோபம் கொண்டு **திரும்பிப் போனான்.** போகும் வழியிலே தன் கூட்டத்திலிருந்த ஒரு ஊழியக்காரன் சொன்ன வார்த்தைக்கு கட்டுப்பட்டு, தன் வாகனத்திலிருந்து இறங்கினான். இவ்வளவு நேரமும் தன் வாகனத்தை விட்டு மேட்டிமையான எண்ணத்தோடு இருந்த நாகமானிடம் ஒரு மாற்றம் வந்தது. மனமாற்றம் பெற்றான் (2 இரா. 5 : 14). யோர்தானில் இறங்கி **7 தரம்** மூழ்கி எழும்போது **பரிபூரண** சுகம் பெற்றான், நடந்தே சென்று எலிசாவின் முன் போய் **நின்று** கர்த்தருக்கு சாட்சி பகிர்ந்தான். எல்லா மேட்டிமையான தீய எண்ணங்களும் அவனை விட்டு இறங்கியது. சீரியா நாட்டிற்கு தேவனால் இரட்சிப்பு கிடைத்தது.

இறுதியாக ஏசா, யாக்கோபு சந்தித்ததும் (அண்ணன், தம்பி) யாக்கோபும், யோசேப்பும் சந்தித்ததும் (தகப்பனும், மகனும்) தேவாதி தேவனுடைய சித்தமும் மற்றும் திட்டமும் ஆகும்.

*__ஏசாவும், யாக்கோபும் :__*

யாக்கோபு மக்னாயீம் என்னும் இடத்திலிருந்து ஏசா குடியிருந்த சேயீர் என்னும் இடத்துக்குப் போகிறார். தன் மனைவிகள், 12 மகன்கள், 1 மகளையும் அழைத்துக் கொண்டு போனார். கர்த்தரிடம் ஒரு வார்த்தை மட்டும் சொன்னார். **"என் சகோதரனாகிய ஏசாவின் கைக்கு என்னைத் தப்புவியும்..." (ஆதி. 32 : 11).**

யாக்கோபு ஏசாவுக்கு தன் வேலைக்காரர்கள் மூலமாக அனுப்பின காணிக்கைகளைப் பார்த்தால் (ஆதி. 32 : 14, 15) மிகப்பெரிய ஐசுவரியவான் / சீமான் என்பது விளங்கும். ஆகவே, யாரையும் நடத்தி கூட்டி வந்திருக்க மாட்டார். காரணம் ஒட்டகம், கோளிகைக் கழுதைகள், கழுதைக் குட்டிகள் (ஆதி 32 : 15) எல்லாம் யாக்கோபிடம் இருந்தது. அதின்மேல் ஏறி/அமர்ந்து தான் எல்லோரும் சேயீர் தேசத்துக்கு வந்திருப்பார்கள். மறுநாள் யாக்கோபு தன் சகோதரனாகிய ஏசாவை தூரத்திலே கண்டு 7 தரம் தரைமட்டும் குனிந்து வணங்கி, தன் சகோதரன் கிட்டச் சேர்ந்தான்.

அப்போது நடந்தது என்ன?

**"... ஏசா எதிர்கொண்டு ஓடி வந்து அவனைத் தழுவி, யாக்கோபின் கழுத்தைக் கட்டிக் கொண்டு, அவனை முத்தஞ் செய்தான். இருவரும் அழுதார்கள்" (ஆதி 33 : 4)** சமாதானத்திற்கு தேவன் இடைபட்டார்.

## *<u>யாக்கோபும், யோசேப்பும்</u>*

**நான் மரணமடையுமுன்னே போய் யோசேப்பைப் பார்ப்பேன் என்றான் யாக்கோபு (ஆதி. 45 : 28).**

யாக்கோபு பெயர்செபாவிலிருந்து எகிப்துக்கு பிரயாணம் புறப்பட்டான். இஸ்ரவேலின் குமாரர் தங்கள் தகப்பனாகிய யாக்கோபையும், குழந்தைகளையும், மனைவிகளையும், ஆடு, மாடுகளையும், பொருட்களையும், யோசேப்பு அனுப்பின வண்டிகளின் மேல் ஏற்றிக் கொண்டு எகிப்திற்குப் போனார்கள். எகிப்திற்குப் போன யாக்கோபின் குடும்பத்தாரின் எண்ணிக்கை எழுபது (70 பேர்) மற்றும் ஆடு, மாடுகள், ஒட்டகங்கள், கழுதைகள், கடாரிகள் எல்லாவற்றையும் ஏற்றிக் கொண்டுவர, விதவிதமான வாகனங்களையும், தன் தகப்பனுக்கு எகிப்தின் உச்சிதமான பொருட்கள், அப்பம் எல்லாவற்றையும் யோசேப்பு அனுப்பினான்.

யாக்கோபு கோசேன் நாட்டிலே வருகிறார் என்று யூதா மூலம் யோசேப்பு அறிந்தபோது என்ன செய்தான்?

**யோசேப்பு தன் இரதத்தை ஆயத்தப்படுத்தி, அதின்மேல் ஏறி தன் தகப்பனாகிய இஸ்ரவேலைச் சந்திக்கும்படி போய், யாக்கோபைக் கண்டு அவனுடைய கழுத்தைக் கட்டிக் கொண்டு வெகு நேரம் அவன் கழுத்தை விடாமல் அழுதான் (ஆதி 46 : 29).**

யோசேப்பு, ராமசேஸ் என்னும் நாட்டிலே அவர்களைக் குடியேற்றினான். பழைய ஏற்பாடு மற்றும் புதிய ஏற்பாட்டுக் காலத்திலே வாகனங்கள் மனிதர்களுக்கு பெரும் உதவியாயிருந்தது. நன்மையான காரியத்திற்கு பயன்படுத்தினார்கள். விஞ்ஞான முன்னேற்றத்தினால் தற்போது, ஒருவர், இருவர் பயணிக்கும் வாகனங்களிலிருந்து பல்லாயிரம் பேர் ஒரே நேரத்தில் பயணிக்கும்படியாகவும், பொருட்களை கொண்டு செல்லும்படியாகவும், தரை, கடல், வான்வெளி என்று பல வழிகளில் மனிதனின் பயணங்கள் மிக வேகமாகவும், ஆபத்து நிறைந்ததாகவும், மரணங்கள் நிகழ்வதாகவும் மாறியுள்ளது. கர்த்தர் மனிதனுக்கு கொடுத்த ஞானத்தினால் உருவாக்கப்பட்டுள்ள நவீன வாகனங்களைப் பயன்படுத்தி, நற்செய்தி இதுவரை அறிவிக்கப்படாத, சென்றடையாத அனைத்து இடங்களுக்கும் அறிவிக்கப்பட இவ்வாகனங்கள் பயன்படுத்தப்படவும், தேவ நாமம் மகிமைப்படவும் ஜெபிப்போம்.

நன்மையும், கிருபையும் நம் மரண பரியந்தம் கர்த்தர் தொடரப் பண்ணுவார்.

ஆமென்!

**– சகோதரி. பேர்ல் குயிலிராஜா**

# IBT-இன் நிகழ்வுகள்



பீல் என்ற மொழிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ள
மொழி பெயர்ப்பாளர் சகோ. அகலேஷ்.



கோவை IBT மையத்தில் நடைபெற்ற
மொழிபெயர்ப்புப் பணியின்போது வந்திருந்த பணித்தள
இயக்குநர் திரு. சாமுவேல் ஞானதாஸ் அவர்கள்.




மார்ச் 8-ஆம் தேதியன்று கோவை IBT மையத்தில்
முன்னேற்றப் பணியாளர்களுக்கு ஆலோசனைக்
கூட்டம் நடைபெற்றது.



மார்ச் 8-ஆம் தேதியன்று நடைபெற்ற
முன்னேற்றப் பணியாளர்களுடன்
IBT ஊழிய நிர்வாகிகள்.



பீல் மொழிபெயர்ப்பு ஒப்பந்தத்தில் IBT தலைவர்
திரு. ஜெபஸ்செல்வின், திரு. சாமுவேல் ஞானதாஸ்,
FMPB பொதுக்காரியதரிசி ஜான் பெர்லின் மற்றும்
FMPB மொழிபெயர்ப்பு அலுவலர்கள்.



பிப்ரவரி மாதம் ஒடிஷா பணித்தளப் பார்வையில்
IBT பணித்தள ஆலயத்தில் தேவ செய்தியளிக்கும்
திரு. சாமுவேல் ஞானதாஸ் அவர்கள்.

# IBT-இன் நிகழ்வுகள்



நீலகிரி மாவட்டம், கோத்தகிரியில் தையல் பயிற்சி முடித்த பெண்களுக்கு சான்றிதழ்கள் 24.3.2025 அன்று வழங்கப்பட்டன.



ஒடிஷா, கோண்டாபொர்ஜா பணித்தளத்தில் எழுத்தறிவு பணியில் பங்கேற்ற பெண்கள்.



மார்ச் 23-ஆம் தேதியன்று கோவை, CSI St. Stephen's ஆலயத்தில், தேவ செய்தியளிக்கும் திரு. S. ராஜசேகரன் அவர்கள்.



மார்ச் 16-ஆம் தேதியன்று CSI இயேசு ரட்சகர் ஆலயத்தில் துதி பாடல் பாடும் IBT குழுவினர்.



மார்ச் 9-ஆம் தேதியன்று கோவை, ஒண்டிப்புதூர், பட்டணத்திலுள்ள TELC சபையில் தேவ செய்தியளிக்கும் சகோ. ராபர்ட் அவர்கள்.



கோவை, ஒண்டிப்புதூர், பட்டணத்திலுள்ள TELC சபையில் IBT ஊழிய விளக்கமளிக்கும் திரு. ஜாண் சேகர் அவர்கள்.

# ஆசிரியர் மடல்

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமான சகோதர, சகோதரிகளுக்கு சத்திய வார்த்தை பத்திரிகையின் சார்பாக எங்கள் அன்பின் வாழ்த்துதலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**''சமாதானம் பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள்: அவர்கள் தேவனுடைய புத்திரர் என்னப்படுவார்கள்" (மத். 5 : 9).**

உலகத்திலே இரண்டு நாடுகளுக்கிடையே நடக்கும் சண்டையினால் அந்த தேசத்தின் ஜனங்கள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். தங்கள் குடியிருப்புகளை இழக்கிறார்கள், உணவு, தண்ணீர் கிடைக்காமல் திண்டாடுகிறார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலையில் மூன்றாவது ஒரு நாடு அந்த இரு நாடுகளுக்கிடையே சமாதானத்தை உண்டு பண்ணி, போரை நிறுத்தும்பொழுது பாதிக்கப்பட்ட ஜனங்களின் துக்கம் சந்தோஷமாய் மாறும். அதைப்போல இரண்டு குடும்பங்களுக்கிடையே அல்லது சகோதர, சகோதரிகளுக்கிடையே கணவன், மனைவிக்கிடையே நடக்கும் சண்டைகளை வேடிக்கைப் பார்த்து, அதற்குள் நுழைந்து இன்னும் அதிகமாய் அவர்களுக்குள் கசப்பையும், வெறுப்பையும், வன்மத்தையும் உண்டாக்கி, அவர்களை முற்றிலுமாய் பிரித்து அந்த சந்தோஷத்திலே குளிர்காய்கிற ஜனங்களையும் இந்த நாட்களில் நாம் பார்க்கிறோம். இது தேவனுக்கு அருவருப்பான செயல். நீதி 6:19-இல் கர்த்தர் அருவருக்கிற 7 காரியங்களில் இதுவும் ஒன்று (சகோதரருக்குள்ளே விரோதத்தை உண்டுபண்ணுதல்). இரு மனிதர்களிடையே நடக்கும் பிரச்சனையை, நல்ல காரியங்களை எடுத்துக்கூறி, அவர்களின் பகையை மாற்றி, சமாதானத்தை உண்டு பண்ணுவதையே கர்த்தர் விரும்புகிறார்.

தாவீது வனாந்தரத்தில் இருந்த பொழுது நாபால் என்னும் ஒரு மனுஷன் இருந்தார். அவனிடம் ஆயிரக்கணக்கான ஆடுகள் இருந்தன. அவனுடைய மேய்ப்பர்கள் ஆடுகளை மேய்க்கும் பொழுது அவர்களுக்கு தாவீதின் ஆட்கள் பாதுகாப்பாயிருந்தார்கள். ஒருநாள் தாவீதின் ஆட்கள் நாபாலிடத்தில் உணவு பொருட்களுக்காக உதவி கேட்டபொழுது அவர்களை நாபால் அவமதித்து அனுப்பிவிட்டான். அதினிமித்தம் தாவீது நாபாலையும் அவனுக்குண்டான எல்லாவற்றையும் அழிக்க வந்தபொழுது, அதைக் கேள்விப்பட்ட நாபாலின் மனைவி அபிகாயில் தாவீதை சந்திக்க எதிர்கொண்டு போய் ஞானமாய் பேசி தாவீதின் இருதயத்தை மாற்றி, நடக்கவிருந்த அழிவை மாற்றி சமாதானத்தை ஏற்படுத்தினாள்.

இயேசு கிறிஸ்துவும் நம்முடைய பாவங்களினால் நாம் அழிந்து போகாதபடிக்கு பிதாவினிடத்தில் பரிந்து பேசுகிறவராயிருக்கிறார் (1 யோவான் 2 : 1). ஏனெனில் நமக்கு சமாதானத்தை உண்டாக்கும் ஆக்கினை அவர்மேல் வந்தது. தம்முடைய பரிசுத்த இரத்தத்தை சிலுவையில் சிந்தி, நம்முடைய பாவங்களைக், கழுவி நமக்கு சமாதானத்தை உண்டாக்கினார்.

**அவர் சிலுவையில் சிந்தின இரத்தத்தினாலே சமாதானத்தை உண்டாக்கி, பூலோகத்தில் உள்ளவைகள், பரலோகத்திலுள்ளவைகள் யாவையும் அவர் மூலமாய்த் தமக்கு ஒப்புரவாக்கிக் கொள்ளவும் அவருக்குப் பிரியமாயிற்று (கொலோ. 1:20).**

நாமும் கிறிஸ்துவைப் போல எல்லாரிடத்திலும் சமாதானத்தை ஏற்படுத்தவே நாடுவோமாக!

IBT ஊழியத்தில் கடந்த மார்ச் மாதம் 3-ஆம் தேதியன்று மாலை 7.00 மணிக்கு கோவை, மீனா எஸ்டேட் பகுதியில் வசித்துவரும் திரு. பிலிப் சாமுவேல் அவர்கள் இல்லத்தில் ஜெபக்கூடுகை

நடைபெற்றது. அதில் பாடல்கள், சிறப்பு ஜெபங்கள் மற்றும் IBT சார்பாக Mrs. வெரோனிக்கா விஜயன் அவர்கள் தேவ செய்தியும், திரு. M. ஜான் வில்லியம் அவர்கள் IBT ஊழிய விளக்கத்தைக் கொடுத்தார். ஏறக்குறைய 50 பேர் இக்கூடுகையில் பங்கு பெற்றார்கள். இரவு உணவும், IBT ஊழியத்திற்கு காணிக்கையும் திரு. பிலிப் சாமுவேல் அவர்கள் வழங்கினார். அக்குடும்பத்திற்கும், பங்கு பெற்றவர்களுக்கும் IBT நன்றியைத் தெரிவிக்கிறது.

மார்ச் மாதம் 8-ஆம் தேதியன்று கோவை IBT மையத்தில் நடைபெற்ற முன்னேற்றப் பணியாளர்கள் கலந்தாய்வுக் கூட்டத்தில் IBT தலைவர் திரு. P. ஜெபஸ்செல்வின், பொருளர் திரு. M. ஜான்வில்லியம், Field Director பணித்தள இயக்குநர் திரு. சாமுவேல் ஞானதாஸ், G.C. அங்கத்தினர்கள் திரு. தீமோத்தி, திரு. ஜாண்சேகர், திரு. ராஜகுமார் மற்றும் தமிழ்நாடு, கேரளாவில் பணிபுரியும் 9 முன்னேற்றப் பணியாளர்கள் கலந்து கொண்டு கடந்த வருடத்தின் பணிகளைக் குறித்து கலந்தாலோசனை செய்து, முன்னேற்றப் பணியை மேலும் சிறப்பாகவும் IBT ஊழியத்தின் தேவைகள் சந்திக்கப்படும் வரையிலும் இருக்கும்படியான நல்ல ஆலோசனைகளைக் கூறினார்கள். சிறப்பாகச் செய்யும் முன்னேற்றப் பணியாளர்கள் தங்கள் பணிகளைக் குறித்து விளக்கமாக எடுத்துக் கூறினார்கள். காலை 10.00 மணிக்கு ஆரம்பித்த கூடுகை மாலை 3.00 மணியளவில் நிறைவு பெற்றது.

9-ஆம் தேதியன்று கோவை, ஒண்டிப்புதூர், பட்டணம் என்ற இடத்திலுள்ள TELC சபையில் IBT சார்பாக சகோ. ராபர்ட் அவர்கள் தேவசெய்தியும், திரு. ஜாண்சேகர் அவர்கள் IBT ஊழிய விளக்கமும் கொடுத்தார்கள்.

இதே மாதம் 14, 15, 16 தேதிகளில் கோவை CSI இயேசு ரட்சகர் ஆலயத்தில் லெந்துகால மாலைக் கூட்டங்களில் IBT சார்பாக திரு. S. ராஜசேகரன் அவர்கள் தேவசெய்தியும், 15 & 16 தேதிகளில் திரு. M. ஜான் வில்லியம் அவர்களும், திரு. K. கிதியோன் அவர்களும் IBT ஊழிய விளக்கத்தைக் கொடுத்தார்கள்.

20-ஆம் தேதியன்று IBT-இன் பணித்தள இயக்குநர் திரு. சாமுவேல் ஞானதாஸ் அவர்கள் ஸ்ரீலங்கா நாட்டிலுள்ள கொழும்பு நகருக்கு, வேடர் மொழியில் இயேசு கிறிஸ்துவை அறிய வைக்கும் முயற்சியில் அம்மொழி பேசும் மக்களில் ஒரு சிலரைச் சந்தித்து, நம் ஊழியத்தின் நோக்கத்தை அவர்களுக்கு விளக்கிக்கூறி, முக்கியமானவர்களிடம் கலந்து ஆலோசித்துவிட்டு மார்ச் 28-ஆம் தேதியன்று திரும்பியுள்ளார்.

23-ஆம் தேதியன்று கோவை, புலியகுளத்திலுள்ள CSI St. Stephen's சபையில் காலை ஆராதனையிலும், மாலை லெந்து காலக்கூட்டங்களில் திரு. S. ராஜசேகரன் அவர்கள் தேவசெய்தியளித்தார். திரு. M. ஜான்வில்லியம் அவர்கள் IBT ஊழிய விளக்கமளித்தார்.

மேலே கூறப்பட்ட மூன்று சபைகளிலும் IBT ஊழியத்திற்கு சந்தர்ப்பமும், காணிக்கையும் கொடுத்த சபை ஆயர்கள், செயலர், பொருளர் மற்றும் பங்குபெற்ற மக்கள் அனைவருக்கும் IBT நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறது.

IBT ஊழியத்தில் நடைபெற்றுவரும் மொழிபெயர்ப்பு ஊழியங்களுக்காகவும், மிஷனெரிப் பணியிலுள்ள சவால்கள், எதிர்ப்புகள் மாறவும், சமூகப்பணிகள் மற்றும் சத்திய வார்த்தைப் பத்திரிகைகளுக்கு புதிய வாசகர்கள் கிடைக்கவும் தொடர்ந்து ஜெபியுங்கள்.

கர்த்தர் உங்கள் அனைவரையும் உங்கள் பிள்ளைகளின் எதிர்கால வாழ்வு சிறப்பாக இருக்கவும், கர்த்தர் ஆசீர்வதிக்க ஜெபிக்கிறோம்.

கர்த்தரின் பணியில்,
உங்கள் சகோதரன்

# பணித்தளச் செய்திகள்

*மொழிபெயர்ப்பாளர் / மிஷனெரி :*
*சகோ. சோபத்ராம் டோப்போ*
*மொழி : குடுக்*
*பணித்தளம் : லைலுங்கா (சட்டிஸ்கார்)*

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள்!

கடந்த மாதம் மொழிபெயர்ப்புப் பணிக்காக குழு சரிபார்ப்புப் பணியில், புதிய ஏற்பாடு மத்தேயு புத்தகம் அதிகாரம் 12 முதல் 28 வரையிலும், மாற்கு அதிகாரம் 1 முதல் 16 வரையிலும், லூக்கா அதி. 1 முதல் 8–ஆம் அதிகாரம் வரையிலும் முடிக்கப்பட்டது. கடந்த பிப்ரவரி மாதம் ஒடிஷா மாநிலம் கலிமலாவிலுள்ள IMST-இல் நடைபெற்ற சரிபார்ப்பு மற்றும் மொழிபெயர்ப்புப் பயிற்சியில் கலந்து கொண்டேன். IMS மிஷனெரி Mrs. கிரிஜா ஐசக் அவர்கள் பயிற்சியளித்தார்கள். இதில் வேதாகமப் புத்தகங்களின் அறிமுகம், தலைப்புகள், கீழ்குறிப்புகள் கற்றுக் கொடுக்கப்பட்டன. பணித்தள இயக்குநர் திரு. சாமுவேல் ஞானதாஸ் அவர்களும், கோவை IBT அலுவலகத்திலிருந்து திரு. எஸ்றா காலேப் அவர்களும் இங்கு வந்திருந்தார்கள்.

ஒவ்வொரு வியாழக்கிழமையன்றும் வீட்டு ஜெபக்கூட்டத்திற்கு, குலாமா என்ற கிராமத்திற்குச் சென்று பல காரியங்களுக்காக ஜெபம் ஏறெடுக்கப்பட்டது.

குடுக் மொழியில் BSI சரிபார்ப்பு விரைவாக ஆரம்பிக்கப்படவும், இவ்வருடத்தில் அச்சிடக் கொடுக்கப்படவும் ஜெபியுங்கள். என் குடும்பத்திற்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்.

----------•----------

*முன்னேற்றப் பணியாளர் :*
*சகோ. கிதியோன்*
*பணித்தளம் : கோயம்புத்தூர் (தமிழ்நாடு)*

கர்த்தருடைய வல்லமையுள்ள நாமத்திற்கு மகிமையுண்டாவதாக!

கடந்த மாதத்திலும் முன்னேற்றப் பணியும், அலுவலகப் பணியும் செய்ய கர்த்தர் கிருபை செய்தார். முன்னேற்றப் பணிக்காக சூலூர், சிங்காநல்லூர், ஒண்டிப்புதூர், வரதராஜபுரம், SIHS காலனி, N.K. பாளையம், சித்ரா, வெள்ளலூர், போத்தனூர், செட்டிபாளையம், பேரூர், ஆலந்துறை காருண்யா, சரவணம்பட்டி, கணபதி, நல்லம்பாளையம், கவுண்டனூர், மாதவராயபுரம், தொண்டாமுத்தூர், சுந்தராபுரம், காந்திபுரம், ராஜவீதி, செட்டி வீதி, நியூ சித்தாபுதூர், மணிக்கூண்டு, கவுண்டம்பாளையம், மணியகாரம்பாளையம், தொம்பிலிபாளையம், செல்வபுரம், துலுக்கபாளையம், ராமநாதபுரம், புலியகுளம், மதுக்கரை, கோவைப்புதூர் ஆகிய இடங்களுக்குச் சென்று, IBT தாங்குநர்களைச் சந்தித்து, காணிக்கைப் பெற்று, ஜெபித்து வந்தேன். கடந்த மாதங்களில் லெந்துகாலக் கூட்டங்களிலும், ஞாயிறு ஆராதனையிலும், சில சபைகளில் IBT ஊழியத்திற்கு சந்தர்ப்பங்கள் கிடைத்தன. எனக்காகவும், என் குடும்பத்திற்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்.

----------•----------

*மிஷனெரி : சகோ. ராமச்சந்திர நாக்*
*பணித்தளம் : போடோமசிகான் (ஒடிஷா)*

கர்த்தரின் நாமத்திற்கு துதி உண்டாவதாக!

கடந்த மாதம் மிஷனெரிப் பணிக்காக செல்லிப்பாடார், போடோமசிகான், சீர்மாபாண்டி, தாஸ்பூர், மாசிகுடா, கோண்டாபுரி, பாராமசி, தங்கதாரி, முண்டாகாட், பட்டிகம், சிர்ச்சியோனி, தெப்ரகுடா, பேட்டல், கசுமிகுடா, திக்ககுடா, சுரஹாண்டி, அம்பதலா, குர்லுகுடா,

சன்மோசிகம்,பட்டர்பாடா, சர்ஜிகுடா ஆகிய கிராமங்களுக்குச் சென்று, நற்செய்தியைக் கூறி, தேவைப்பட்டவர்களுக்கு ஜெபித்தேன். சகோ. பன்மாலக், கோவிந், ஐஸ்வர், பந்த்கா, சங்கர், லம்பு, தினேஷ், கோனேஷ், ராம்தர், சுபாஷ் ஆகோர் மிக வாஞ்சையுடன் நற்செய்தியைக் கேட்டார்கள். IBT மூலமாக வெளியிடப்பட்ட தெஷியா மொழி புதிய ஏற்பாடு குறித்தும், வாசிப்பது குறித்தும் விளக்கிக் கூறினேன். இதுதவிர, ஞாயிறு ஆராதனை, போடோமசிகான் ஆலயத்திலும், உபவாச ஜெபக்கூட்டம், வீட்டு ஜெபக்கூட்டமும் நடத்தப்பட்டன. அவ்வப்போது எதிர்ப்புகளும் வருகிறது. ஊழியங்களுக்கு விரோதமாக வரும் எதிர்ப்புகள் மாறவும், நற்செய்திப் பணிகள் தடையின்றி நடைபெறவும், என் குடும்பத்திற்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்.

----------•----------

*மிஷனெரி : சகோ. பட்டிராஜ்*
*பணித்தளம் : சலாம்பூர் (உத்தரப்பிரதேசம்)*

கர்த்தரின் நாமத்திற்கு துதி உண்டாவதாக!

கடந்த மாதம் மிஷனெரிப் பணிக்காக மக்காரா, மகாராஜ்பூர், உரதவல்லி, அமுவாபாண்டே, கஞ்சன்பூர் மற்றும் சில கிராமங்களுக்குச் சென்று, நற்செய்தியை அறிவித்து, கைப்பிரதிகள் நற்செய்திப் புத்தகங்கள் மற்றும் போஜ்புரி NT ஆகியவற்றை விநியோகித்து, தேவைப்பட்ட-வர்களுக்காக ஜெபித்து வந்தேன். சகோ. மேக்கர் சௌகான், அமர்நாத் யாதேவ், திருமதி. ரேக்கா, உஷா, கௌசியா, இந்து திதி, மற்றும் நீட்டு ஆகியோர் நற்செய்தியை உற்சாகமாகக் கேட்டார்கள். இதுதவிர ஞாயிறு ஆராதனை சலாம்பூர் பணித்தளத்திலும், உபவாச ஜெபக்கூடுகையும், வீட்டு ஜெபக்கூட்டங்களும் நடத்தப்பட்டன. சபை நடத்துவதற்கு தடைகள் வராமலிருக்கவும், என் மிஷனெரிப் பணி, குடும்பத்திற்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்.

*மொழிபெயர்ப்பாளர் :*
*சகோ. சந்திரகாந்தா பர்லா*
*மொழி : முண்டாரி*
*பணித்தளம் : பாலுப்பள்ளி (ஒடிஷா)*

கர்த்தரின் கிருபையால் என்னையும், என் குடும்பத்தையும், என் ஊழியத்தையும் கர்த்தர் ஆசீர்வதித்து வருகிறார். மொழிபெயர்ப்புப் பணியில் பழைய ஏற்பாடு பாகத்தில் யாத்திராகமம் அதிகாரம் 35 : 10-ஆம் வசனத்திலிருந்து அதி. 39 : 31-ஆம் வசனம் வரையிலும் கணினியில் கீ-இன் செய்யப்பட்டுள்ளது.

கோவை IBT அலுவலகத்திற்குச் சென்று, சகோ. S.N. சங்கர் கூறியபடியாக சங்கீதப் புத்தகத்தில் சரிபார்ப்புச் செய்தேன். சங்கீதம் 1 : 1 முதல் சங்கீதம் 47 : 9-ஆம் வசனம் வரையிலும் கணினியில் சரிபார்ப்பு செய்யப்பட்டன. உடல்நிலை பாதிப்பினால் ஒருவாரம் கழித்து என் பணித்தளத்திற்கு திரும்பி விட்டேன். Mundari Baptist சபையில் நடந்த 99-வது வருடாந்தரக் கூடுகையில் கலந்து கொண்டு 100-ற்கு மேற்பட்ட முண்டாரி மொழியிலுள்ள புதிய ஏற்பாடு புத்தகங்களை அங்கு வந்திருந்தவர்களுக்கு விநியோகம் செய்தேன். என் உடல் நலத்திற்காகவும், என் குடும்பத்திற்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்.

----------•----------

*மொழிபெயர்ப்பாளர் : சகோ. ராஜா*
*மொழி : இருளா-குஞ்சப்பனை*
*பணித்தளம் : காரமடை (தமிழ்நாடு)*

கர்த்தருடைய பரிசுத்த நாமத்திற்கு மகிமை உண்டாவதாக. இந்த மாதத்திலும் கர்த்தரின் பெரிதான கிருபையினால் தங்களது IBT இந்திய வேதாகம மொழிபெயர்ப்பாளர்கள் ஸ்தாபனத்தில், குஞ்சப்பனை இருளா மொழியின் மொழி பெயர்ப்பாளராக இணைந்து இந்த கனமான தேவ ஊழியத்தில் பங்குள்ளவனாக தேவன் கிருபை செய்திருக்கிறார். இந்த மாதம் மொழிபெயர்ப்புப்

பணி சரிபார்த்தல், சங்கீதம் மற்றும் நீதிமொழிகள் புத்தகங்கள் கொடுக்கப்பட்டது. சங்கீதம் 1 முதல் சங்கீதம் 36 வரை கிட்டத்தட்ட 499 வசனங்கள் சரிபார்க்கப்பட்டு, ஒரு சில வசனங்கள் மாற்றி எழுதப்பட்டது. ஒரு சில வசனங்களில் உள்ள வார்த்தைகள் மாற்றி எழுதப்பட்டது. ஒரு சில வசனங்களில் உள்ள வார்த்தைக்கு சரியான மொழிபெயர்ப்புக்கு மறுபரிசீலனை செய்ய குறித்து வைக்கப்பட்டிருக்கிறது. கர்த்தருக்கு சித்தமானால் வருகின்ற மாதம் குஞ்சப்பனை பகுதிக்கு சென்று ஏற்கனவே மொழிபெயர்க்கப்பட்டு தயார் நிலையில் உள்ள புதிய ஏற்பாடு புத்தகங்களை விநியோகம் செய்யலாம் என திட்டமிடப்பட்டுள்ளது. அப்போது தெரியாத வார்த்தைகளுக்கான சரியான மொழிபெயர்ப்பு என்ன என்பதை அங்குள்ள மக்களிடம் கேட்டு சரிசெய்யப்பட்டும். இந்த மாதத்தில் சபை ஊழியங்களில் கலந்து கொண்டு வீட்டு கூட்டங்கள், ஊழியர் கூடுகைகள், உபவாச ஜெபம் போன்றவைகளில் தேவனை மகிமைப்படுத்த கிருபை செய்தார். தொடர்ந்து இந்த மொழிபெயர்ப்பு ஊழியம், கிராம ஊழியங்கள், சபை ஊழியங்களில் என்னை தேவன் பயன்படுத்தும்படியாக ஊக்கமாக ஜெபித்துக் கொள்ளுங்கள்.

# உலகச் செய்திகள்

★ மார்ச் 17-ஆம் தேதியில் இஸ்ரேல் மீண்டும் காஸாவின் தெற்கு நகரங்கள் கான்யூனிஸ், ராஃபா, வடக்குப் பகுதிகள் காஸா சிட்டி மற்றும் மத்திய நகரங்களான டேய்ர் அல்-பாலா போன்ற நகரங்களில் நடத்திய வான் தாக்குதலில் 404 பேர் உயிரிழந்தனர். மீண்டும் ஹமாஸ் தீவிரவாதிகளைக் குறிவைத்து மார்ச் 20-ஆம் தேதி நடத்திய வான்தாக்குதலில் 85 பேர் உயிரிழந்தனர்.

★ இந்தோனேசியா ஆட்சியதிகாரத்தில் ராணுவத்தின் பங்கை அதிகரிக்கும் சர்ச்சைக்குரிய மசோதாவை அந்நாட்டு நாடாளுமன்றம் வியாழக்கிழமை ஏகமனதாக நிறைவேற்றியது. இந்த ராணுவ சட்டத்திருத்த மசோதா நிறைவேற்றப்பட்டதன் மூலம் ராணுவ அதிகாரிகள் தங்களது பதவிகளை ராஜினாமா செய்யாமலேயே மேலும் பல அரசுப் பொறுப்புகளை வகிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

★ உலகின் மகிழ்ச்சிகரமான நாடுகளின் தரவரிசைப் பட்டியலில் 118-ஆவது இடத்தில் இந்தியா உள்ளது. பாகிஸ்தான், பாலஸ்தீனம், உக்ரைன், நேபாளம் நாடுகளை விட இந்தியா பின்தங்கி இருப்பது தெரியவந்துள்ளது. உலகின் மிகுந்த மகிழ்ச்சிகரமான நாடாக பின்லாந்து உள்ளது.

★ சாம்பியன் கோப்பை கிரிக்கெட் போட்டியில் வாகை சூடிய இந்திய அணிக்கு ரூ. 58 கோடி ரொக்கப்பரிசு வழங்கப்படுமென இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியம் (பி.சி.சி.ஐ.) 20-03-2025 அன்று அறிவித்தது.

★ சர்வதேச ஒலிம்பிக் கமிட்டியின் தலைவராக ஜிம்பாப்வேயைச் சேர்ந்த கிர்ஸ்டிகவன்ட்ரி (41) மார்ச் 20-இல் தேர்வு செய்யப்பட்டார். இந்தப் பதவிக்கு வரும் முதல் பெண், முதல் ஆப்பிரிக்கர் என்ற பெருமைகளை அவர் பெற்றுள்ளார். அடுத்த 8 ஆண்டுகளுக்கு ஐஓசி தலைவராக பொறுப்பு வகிக்கவிருக்கும் கிர்ஸ்டி, வரும் ஜூன் மாதம் பொறுப்பேற்கிறார்.

# இரட்சிப்பைத் தள்ளிப்போடாதீர்கள்

பொதுவாக நம்மிடம் ஒப்படைக்கப்பட்ட எந்தவொரு வேலையையும், நாம் எடுக்க வேண்டிய எந்த தீர்மானத்தையும் தள்ளிப் போடுவது – ஒரு கெட்ட பழக்கம். இப்பொழுது வேண்டாம், இன்னொரு நாளைக்குப் பார்த்துக் கொள்ளலாம் – என்று சாக்கு போக்கு சொல்லுவது நல்லதல்ல என்பது மாத்திரமல்ல; அது ஆபத்தானது.

பேலிக்ஸ், பவுலை நியாயம் விசாரித்தபோது, பவுல் நீதியைக் குறித்தும், இனிவரும் நியாயத் தீர்ப்பையும் குறித்து பேசியபோது பேலிக்ஸ் பயந்தான். ஆனாலும், இப்பொழுது நீ போகலாம் எனக்கு நேரம் கிடைக்கும் போது இதைப்பற்றி யோசிக்கிறேன் என்று சொல்லி விட்டான் (அப். 24 : 25).

ஒரு வாலிபப் பெண் ஒரு கூட்டத்தில் இயேசுவின் இரட்சிப்பைக் குறித்து செய்தி கேட்டாள். இன்று மரித்தால் எங்கே போவாய் – என்ற செய்தியைக் கேட்ட போது, அவள் ஆடிப்போய் விட்டாள். ஆண்டவருக்கு தனது வாழ்க்கையை ஒப்புக் கொடுக்க விரும்பினாள். ஆனாலும், அன்று மாலை ஒரு Dance Program - நாட்டிய நிகழ்ச்சி இருந்ததால், இன்னொரு நாளைக்குப் பார்க்கலாம் என்று தனக்குள் சொல்லிக் கொண்டு வீட்டிற்கு வந்துவிட்டாள்.

இரவு தனது படுக்கை அறைக்குச் சென்ற போது அவளுக்கு தூக்கமே வரவில்லை. நீ இரட்சிக்கப்பட வேண்டும். இன்று மரித்தால் நீ எங்கு போவாய் என்ற பிரசங்கியாரின் வார்த்தைகள் அவளை நிலைகுலையச் செய்தது. எனவே, தனது ’டைரி’யை எடுத்து அதில் அடுத்த மாதம் நிச்சயம் ஆண்டவரைத் தேடி இரட்சிக்கப்படுவேன்’ – என்று எழுதிவிட்டு படுக்கச் சென்றாள். மீண்டும் தூக்கம் வர மறுத்தது. அடுத்த மாதத்திற்குள் திடீரென்று இறந்து விட்டால் என்ன செய்வது? மீண்டும் தனது ’டைரி’யை எடுத்து அதில் ‘அடுத்த வாரம்’ இரட்சிக்கப்படுவேன் என்று எழுதினாள். மீண்டும் படுத்தபோது தூக்கம் வரவேயில்லை. கடைசியாக தனது ’டைரி’யில் நாளைக்கு இரட்சிக்கப்படுவேன் என்று எழுதிவிட்டு, நன்றாகத் தூங்கிவிட்டாள்.

அடுத்தநாள் காலையில் வெகு நேரமாகியும் அவள் படுக்கையை விட்டு எழவேயில்லை. பெற்றோர் வந்து கதவைத் தட்டியபோதும் எழுந்திருக்கவில்லை. கதவை உடைத்து அவர்கள் உள்ளே சென்று பார்த்தபோது அவள் பிணமாகக் கிடந்தாள்.

அவளது ’டைரி’யில் எழுதிய அந்த ‘நாளை’ அடுத்த நாளை காணாமலே போய்விட்டாள். அதனால் தான் வேதம், இன்றே இரட்சண்ய நாள்; இப்பொழுதே அனுக்கிரக காலம் – என்று நம்மை எச்சரிக்கிறது. இன்றே, இப்பொழுதே, இக்கணமே Right Now - நீங்கள் இரட்சிக்கப்பட வேண்டும். நாளைக்கு, அடுத்த வாரம், அடுத்த மாதம், அடுத்த ஆண்டு என்றோ அல்லது பேலிக்ஸ் பவுலினிடத்தில், “உனக்கு சமயம் கிடைக்கும் போது நான் உன்னை அழைப்பேன்” என்று சொன்னது போல் சொல்லாதீர்கள்.

**அறுவடைக் காலமும் முடிந்து விட்டது; கோடை காலமும் கடந்து போனது; ஆனால் நாமோ இன்னும் இரட்சிக்கப்படவில்லை (எரே. 8 : 20).**

“உயிருள்ள உதாரணங்கள்” என்ற
புத்தகத்திலிருந்து பிரித்தெடுக்கப்பட்டது.

# IBT வருடாந்தர உபவாசக் கூடுகை

நாள் : **9, 10 மே 2025 (வெள்ளி மற்றும் சனி)**

நேரம் : 9-ஆம் தேதி காலை 10.00 மணி முதல் 10-ஆம் தேதி மதியம் 2.00 மணி வரை

இடம் : **Rev. Prof. S. பன்னீர் செல்வம் நினைவு வேதாகம மொழிபெயர்ப்பு மற்றும் பயிற்சி மையம், கோயம்புத்தூர் - 641 014.**

செய்தி : **IBT செய்தியாளர்கள்** – தேசத்தின் எழுப்புதலுக்காக, மிஷனெரி ஊழியங்களுக்காக, வேதாகம மொழி பெயர்ப்பு ஊழியங்களுக்காக, லோகோஸ் முகாமிற்காக, சபை ஊழியங்கள் மற்றும் பலதரப்பட்ட ஊழியங்களுக்காக ஜெபிக்க வாருங்கள்.

**அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.... தொடர்புக்கு : 90470 57414**

# எமது தரிசனமும், எமது பணியும்

**<u>எமது தரிசனம் :</u> "இதுவரை மொழி பெயர்க்கப்படாத அனைத்து இந்திய மொழிகளிலும் வேதாகமம் மொழி பெயர்க்கப்பட்டு ஒவ்வொரு சமூகமும் தங்களது தாய்மொழியில் கடவுளுடைய வார்த்தைகளை கிடைக்கும்படி செய்வதே"**

**<u>எமது பணி :</u>** கடவுளுடைய வார்த்தையை, இதுவரை வேதாகமம் இல்லாத அனைத்து இந்திய மொழிகளில் மொழிபெயர்த்து, அச்சிட்டு, போதிப்பது.

மொழிவாரியாக இந்தியாவின் அனைத்துப் பகுதிகளுக்கும் வேதாகம மொழிபெயர்ப்பாளர்கள் / மிஷனெரிகளை அனுப்புதல் மற்றும் ஒவ்வொரு மொழிக்கும் "ஒரு வேதாகம மொழிபெயர்ப்பாளர் குழுவை" அமைத்து அனுப்புதல்.

# ஒரு முக்கிய வேண்டுகோள்

## <u>தேவை</u>

★ கோவை IBT கட்டிடத்திலுள்ள Meeting Hall-இல் கூட்டங்கள் நடத்தப்படும் போது, சப்தம் வெளியே சென்று, அருகாமையிலுள்ள குடியிருப்புகளுக்கு எவ்வித பாதிப்புகளும் ஏற்படாவண்ணம் Meeting Hall-ற்கு Sound Proof System மற்றும் தகுந்த மாற்றங்கள் செய்ய வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டுள்ளது. ஆகவே, இப்பணிகளுக்கு ரூ. 4,50,000/- முதல் ரூ. 5,00,000/- வரை செலவு ஆகும் என்று கணிக்கப்பட்டுள்ளது. இத்தொகையை சந்திக்க தாங்குநர்கள் கிடைக்க ஜெபியுங்கள்.

★ திருச்சி மற்றும் சென்னையில் பணிபுரியும் முன்னேற்றப் பணியாளர்களுக்கு 2 இருசக்கர வாகனங்கள் தேவைப்படுகின்றன. தற்போதுள்ள பழைய வாகனங்களின் செலவு அதிகமாக வருவதால் புதிய வாகனங்கள் கொடுக்க வேண்டியுள்ளது. இதற்கு ஆகும் செலவு ரூ. 2,20,000/-. இதற்கு தாங்குநர்கள் கிடைக்க ஜெபியுங்கள்.

– பொருளாளர், IBT.

## கீழே கொடுக்கப்பட்டுள்ள புத்தகங்கள் விற்பனைக்கு உண்டு. வாசித்துப் பயனடையுங்கள்..!

| | | |
|---|---|---|
| 1. | வானத்தின் வாசல் | ரூ. 70/- |
| 2. | வானத்தின் மன்னா | ரூ. 70/- |
| 3. | பயப்படாதிருங்கள் | ரூ. 70/- |
| 4. | வேதாகமப் புத்தகங்களுக்கு ஓர் அறிமுகம் | ரூ. 60/- |
| 5. | உயிருள்ள உதாரணங்கள் | ரூ. 60/- |
| 6. | பாருக்குள் பரலோகம் | ரூ. 100/- |
| 7. | விவிலியப் பயணத்தின் விடிவெள்ளி | ரூ. 100/- |
| 8. | தேவ சத்தம் | ரூ. 100/- |
| 9. | Word of Life (ஆங்கிலம்) | ரூ. 100/- |
| 10. | Word of Life (மலையாளம்) | ரூ. 100/- |
| 11. | Introduction to the Books of the Bible | ரூ. 70/- |
| 12. | Defeat the Despair (ஆங்கிலம்) | ரூ. 100/- |
| 13. | Seeds for the Good Soil (ஆங்கிலம்) | ரூ. 120/- |
| 14. | சத்திய வார்த்தையின் முத்துக்கள் | ரூ. 120/- |
| 15. | இதய கீதங்கள் (பாடல் புத்தகம்) | ரூ. 60/- |

IBT வெளியிட்டுள்ள புத்தகங்களை தபால் மூலம் பெற விரும்புவோர் எங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள் – செல் : 90470 57414. நேரிடையாக, எங்கள் முன்னேற்றப் பணியாளர்கள் மற்றும் பிரதிநிதிகள் மூலமாகவும் பெற்றுக் கொள்ளலாம். இப்புத்தகங்கள் ஆவிக்குரிய வாழ்விற்கும், சமுதாய வாழ்வின் வெற்றிக்கும் மிகவும் பயனளிக்கக் கூடிய வகையில் Rev. Prof. S. பன்னீர் செல்வம் அவர்களால் எழுதப்பட்டவைகளாகும். ஆகவே, வாங்கிப் படித்துப் பயன்பெறுங்கள்!

Indian Bible Translators ஊழியங்களை காணிக்கைகளால் தாங்க விரும்புவோர் கீழே குறிப்பிட்டுள்ள வங்கிகளின் மூலமாகவும், கீழேயுள்ள **QR Code-ஐ Scan** *செய்து கைபேசி மூலமாகவும்* உங்கள் காணிக்கையை எங்களுக்கு அனுப்பலாம்.

**1. STATE BANK OF INDIA**

| | | |
|---|---|---|
| A/c. No. | : | 30008395600 |
| Name | : | Indian Bible Translators |
| Branch Code | : | 7231 |
| Branch | : | Peelamedu |
| IFS Code | : | SBIN0007231 |

**2. INDIAN BANK**

| | | |
|---|---|---|
| A/c. No. | : | 475742259 |
| Name | : | Indian Bible Translators |
| Branch Code | : | S107 |
| Branch | : | Peelamedu |
| IFS Code | : | IDIB000S107 |

**SCAN & PAY**

Merchant Name : Indian Bible Translators
UPI ID : INDIANBIBLE@SBI

BHIM | UPI

(அனுப்பப்பட்ட விபரத்தை IBT அலுவலகத்திற்கு உடனடியாகத் தெரிவிக்கும்படி கேட்டுக் கொள்கிறோம். செல் : 90470 57414 இது உங்களுக்கு ஒப்புதல் ரசீது அனுப்ப உதவியாக இருக்கும்)

## மிஷனெரி குழந்தைகளுக்குக் கல்வி நிதி

IBT இயக்கமானது ஒவ்வொரு ஆண்டும் நமது மிஷனெரிகளின் பிள்ளைகளுக்குக் கல்வி உதவித் தொகை வழங்கி வருகிறதை நீங்கள் அறிவீர்கள். 2025-26 ஆம் கல்வி ஆண்டிற்கு பிள்ளைகளின் படிப்பிற்காக உதவித் தொகை ரூ. 3 இலட்சம் தேவைப்படுகிறது. IBT பங்காளர்கள், சத்திய வார்த்தை வாசகர்கள் மற்றும் ஊழிய பாரம் கொண்ட அனைவரும் மனமுவந்து உற்சாகத்துடன் நிதி உதவி வழங்கி பிள்ளைகளின் படிப்பிற்கான செலவுகளைத் தாங்க முன் வாருங்கள்.

# துதியுங்கள்! ஜெபியுங்கள்!!

1. திருச்சி முன்னேற்றப் பணியாளர் சகோ. பால்ஜெயசுதன் மூலமாக ஒடிஷா IBT பணித்தளத்திலுள்ள சபைகளுக்கு 12 மின் விசிறிகளுக்கான ரூ. 30,000/– 8 தாங்குநர்கள் உதவியால் வாங்கிக் கொடுக்கப்பட்டதற்காக கர்த்தரைத் துதியுங்கள். ஆலயங்கள் பழுது பார்க்கப்படுவதற்கும், தேவையான தாங்குநர்கள் கிடைக்கவும் உதவி செய்த 8 குடும்பங்களையும் கர்த்தர் ஆசீர்வதிக்க ஜெபியுங்கள்.

2. இம்மாதம் 2–வது வாரம் 9, 10 தேதிகளில் கோவை, IBT மையத்தில் நடைபெற உள்ள வருடாந்திர உபவாச ஜெபக்கூட்டத்தில் IBT பிரதிநிதிகளும் கலந்து கொண்டு ஊழியங்கள், தேச நலன், சமூக நலப்பணிகளுக்காகவும் ஜெபிக்கவும், மிஷனெரி ஊழியங்களின் தடைகள் மாறவும், IBT ஊழியம் விரிவடையவும் ஜெபியுங்கள்.

3. இதுவரை IBT ஊழியம் அறிமுகப்படுத்தப்படாதிருந்த கோவை, வரதராஜபுரத்திலுள்ள CSI இயேசு இரட்சகர் ஆலயத்தில் மார்ச் மாதம் 14, 15, 16 தேதிகளில் நடைபெற்ற லெந்துகாலக் கூட்டங்கள் திரு. S. ராஜசேகரன் அவர்கள் மூலமாக தேவசெய்தியும், திரு. M. ஜான்வில்லியம், திரு. கிதியோன் மூலமாக 2 நாட்களில் IBT ஊழிய விளக்கமும் கொடுக்கப்பட்டதற்காக தேவனைத் துதியுங்கள். இதைப் போலவே, இதுவரை அறிமுகப்படுத்தாத சபைகளில் IBT ஊழியம் அறிமுகப்படுத்தப்பட ஜெபியுங்கள்.

4. IBT–இன் கோரிக்கைகளை பத்திரிகையில் பிரசுரித்திருந்ததைப் பார்த்தும், முன்னேற்றப் பணியாளர்கள், பிரதிநிதிகள் நேரில் தேவைகளைக் கூறும்போதும் மனமுவந்து இதுவரை பல தேவைகளுக்கு உதவிக்கரம் கொடுத்த தாங்குநர்களுக்காக கர்த்தரைத் துதியுங்கள். இதுவரை உதவிசெய்த ஒவ்வொரு குடும்பங்களும் கர்த்தரால் அபரிமிதமாக ஆசீர்வதிக்கப்பட ஜெபியுங்கள்.

5. சத்தியவார்த்தை பத்திரிகைக்கு பல வருடங்களாக வாசகர்களாக இருந்து, பத்திரிகை ஊழியத்தை ஆதரித்து வரும் வாசகர்களுக்காக கர்த்தரைத் துதியுங்கள். இவர்கள் மூலமாக பிறருக்கும் சத்தியவார்த்தை பத்திரிகை அறிமுகப் படுத்தப்படவும், புதிய வாசகர்கள் அதிகஅளவில் இணையவும் ஜெபியுங்கள்.

6. ராஜஸ்தான், மத்தியப்பிரதேசம், உத்திரப்பிரதேசம் மாநிலங்கள் இணையும் பகுதிகளில் (Borders) வசித்து வரும் “பீல்” (Bheel) மொழிபேசும் மக்களுக்கும் அவர்கள் மொழியில் வேதத்தைக் கொடுக்க FMPB மூலமாக மொழிபெயர்ப்பாளர் கிடைத்ததற்காக கர்த்தரைத் துதியுங்கள். இம்மொழிபெயர்ப்பாளருக்குத் தேவையான பயிற்சி விரைவில் கொடுக்கப்படவும், அவரும் உற்சாகத்துடன் மொழிபெயர்ப்புப் பணியைக் கற்றுக்கொண்டு இப்பணி ஆரம்பிக்கப்படவும் ஜெபியுங்கள்.

7. ஒடிஷா மாநிலத்திலுள்ள சந்தோஷ்பூர் பணித்தளத்திலுள்ள IBT ஆலயம் பழுதுபார்க்க வேண்டியுள்ளது. இப்பணிகளுக்கு ஆகும் செலவினை சந்திக்க தாங்குநர்கள் கிடைக்க ஜெபியுங்கள். இதற்கு ஏறக்குறைய ரூ. 87,500/– தேவைப்படுகிறது.

## SEND ALL YOUR CONTRIBUTIONS

**Cheques / DD / M.O. to**

**INDIAN BIBLE TRANSLATORS**

Civil Aerodrome Road, Coimbatore - 641 014.
Phone : 0422 - 4520143
WhatsApp & Mobile : 90470 57414
E-mail : indianbibletranslators@gmail.com
**Web : www.ibtword.com**

## சத்திய வார்த்தை

‘சத்திய வார்த்தை’ பத்திரிகைக்கு உங்கள் சந்தாவைப் புதுப்பித்துக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம்.
வருட சந்தா ரூபாய். 100/–

*சந்தா அனுப்ப வேண்டிய முகவரி :*

**WORD PUBLISHERS TRUST**
Civil Aerodrome Road, Coimbatore - 641 014.


Editor & Published by On behalf of — **Mr. K. JAISINGH**
**WORD PUBLISHERS TRUST**
14, Ashok Layout,
Civil Aerodrome Road,
Coimbatore - 641 014.

Printed by — **Mr. C.K. VENKATESH**
Chandra Prabha Press
113-118, V.H. Road, CBE-1.


## வாசகர்களுக்கு ஓர் அறிவிப்பு

சத்திய வார்த்தை பத்திரிகையின் சந்தாவைப் புதுப்பிக்காதிருந்தால் ரூ. 100/–ஐ மணியார்டர் மூலமாகவோ அல்லது கீழே குறிப்பிட்டுள்ள வங்கி மூலமாகவும், கீழேயுள்ள **QR Code-ஐ SCAN** செய்து, கைப்பேசி மூலமாகவும் உங்கள் காணிக்கைகளை எங்களுக்கு அனுப்பலாம். அனுப்பப்பட்ட விவரத்தை உடனடியாகத் தெரிவிக்கும்படி கேட்டுக் கொள்கிறோம். இது உங்களுக்கு ஒப்புதல் ரசீது அனுப்ப உதவியாக இருக்கும்.

**தொடர்பு எண். 90470 57414.**

BANK DETAILS

**CENTRAL BANK OF INDIA**

A/c. No. : 1630413107
Name : Word Publishers Trust
Branch : Kalapatti
IFS Code : CBINO282057

**SCAN & PAY**

Address :

**WORD PUBLISHERS TRUST**
14, Ashok Layout,
Civil Aerodrome Road,
Coimbatore - 641 014.


**SATHTHIYA VAARTHAI - TAMIL**

Date of Publishing : 2nd & 3rd May 2025
Postal Regd. No. **CB/052/2024-26**
Licensed to Post without Prepayment No.
**TN/WR/CB/164/WPP/2024-2026 (Tamil)**

**RNI No. 82166**